**சென்னை-6, அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயலாளர் அவர்களின் திருத்திய செயல்முறைகள்**

**முன்னிலை: திரு.ஜெ.ஜோதிராமலிங்கம்**

**ந.க.எண்: 003181/இ2-1/2016** **நாள்: 30.06.2017**

**பொருள்:** பணியாளர் தொகுதி - அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை - 6 - தமிழ்நாடு அமைச்சுப் பணி தொகுதி IV - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட போட்டித் தேர்வு 2013-2014 மற்றும் 2014-2015 தட்டச்சராகப் பணி நியமனம் வழங்கியது - பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டது - திருத்திய செயல்முறைகள் வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை:** 1.தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடித எண்.981/PSD-A/2016, நாள்.01.09.2016.

2.சென்னை-6, அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயலாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.003181/இ2-1/ 2016, நாள்.04.10.2016.

3.சென்னை-6, அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயலாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.003181/இ2-1/ 2016, நாள்.16.06.2017.

4.அரசாணை எண்.130, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள்.22.07.2008.

5.அரசாணை எண்.26, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள்.23.02.2017.

6.செல்வி.பா.மாரிக்கண்ணு, தட்டச்சர் என்பாரின் கடிதம் நாள்.29.06.2017.

---

**ஆணை:**

பார்வை 1-ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடிதத்தின்படி தெரிவு செய்யப்பட்டு, பார்வை 2-ல் காணும் இயக்குநரின் செயலாளர் அவர்களின் செயல்முறைகளின்படி, சென்னை-6, அரசுத் தேர்வுகள் இயக்குநர் அலுவலகத்தில் தட்டச்சராகப் பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வரும் செல்வி.பா.மாரிக்கண்ணு என்பாரது பணியினை அன்னார் பணியில் சேர்ந்த நாளான 13.10.2016 அன்று முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் தட்டச்சர் பணியிடத்தில் வரன்முறைப்படுத்தி பார்வை 3-ல் காணும் செயல்முறைகளின்படி ஆணை வழங்கப்பட்டது.

மேற்காண் ஆணையில், அன்னார் தம் மூன்றாண்டு கால தொடர் பணியில் ஈராண்டு கால தகுதிகாண் பருவத்தை முடிப்பதற்குள் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் நடத்தப்படும் Computer on Office Automation சான்றிதழ் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

Scanned with CamScanner

இந்நிலையில், அன்னார் M.Sc., (Computer Science and Information Technology) தேர்ச்சிப் பெற்றுள்ளதால், தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் நடத்தப்படும் Computer on Office Automation சான்றிதழ் தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்குமாறு பார்வை 6-ல் காணும் கடிதத்தில் கோரியுள்ளார்.

எனவே, பார்வை 4 மற்றும் 5-ல் காணும் அரசாணைகளின் அடிப்படையில் இப்பணியாளர், Computer on Office Automation தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்து இதன் வழியாக ஆணையிடப்படுகிறது.

மேலும், இப்பணியாளரது பணியினை தமிழ்நாடு அமைச்சுப்பணியில் பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறைப்படுத்தப்படுவதால், அன்னார் தம் மூன்றாண்டு கால தொடர் பணியில் ஈராண்டு கால தகுதிகாண் பருவத்தை முடிக்கவேண்டும் எனவும் அறிவிக்கப்படுகிறது. பார்வை 3-ல் காணும் 16.06.2017 நாளிட்ட செயல்முறைகள் இதன்வழியாக இரத்து செய்யப்பட்டு, திருத்திய செயல்முறைகள் வழங்கி ஆணையிடப்படுகிறது.

இந்நியமனம் தற்காலிகமானதெனவும் தொகுதி IV பணி நியமனத்தில் சென்னை / மதுரை உயர்நீதிமன்றம் 2013-2014 மற்றும் 2014-2015 நிலுவையில் உள்ள மனுவின் முடிவிற்கு உட்பட்டதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

செயலாளர் 30/6/17

30/6/17

பெறுநர்

செல்வி.பா.மாரிக்கண்ணு,
தட்டச்சர்,
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை-6.

நகல் : இ1-1, அ1, உபரி (1).

Scanned with CamScanner